# தினம் ஒரு குறள்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின். (216)



பொருள்:– உதவி செய்யும் குணம் உள்ளவரிடம் செல்வம் சேருவது, ஊருக்கு நடுவே இருக்கும் பயன் அளிக்கும் மரத்தில் பழங்கள் பழுத்துக் கிடப்பது போன்றது ஆகும்.



### திருவண்ணாமலையில்

## தலித் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை, ஆக.19– தலித் கூட்டமைப்பு மற்றும் கிராம பெண்கள் சுய சார்பு இயக்கம் ஆகியவை சார்பில் நேற்று திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகம் முன்பு தலித்துகளுக்கான நில உரிமையை நிலை நாட்டும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு பெண்கள் சுய சார்பு இயக்க தலைவி லூர்துமேரி தலைமை தாங்கினார். செயலாளர் அன்னபூரணி, ஒருங்கிணைப்பாளர் கே.பாலன், பொருளாளர் சாந்தி, அமைப்பாளர் டி.பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைப்பாளர் கஸ்தூரி மற்றும் இயக்க தலைவர் ராஜேந்திரன் ஆகியோர் வரவேற்றனர். எம்.மணவாளன் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து பேசினார். பஞ்சமி நிலங்களை மீட்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு பட்டா, தலித் மக்களுக்கு 5 ஏக்கர் இலவச நிலம் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர். இதில் திரளான பெண்கள் கலந்து கொண்டனர்.

யர் அன்பழகன் நடத்தி வைக்கிறார்.

### திருமணம்

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் ஒன்றிய தி.மு.க. செயலாளர் ல.பெரியசாமி–ரங்கம்மாள் ஆகியோரின் மகளும், கீழ்பென்னாத்தூர் ஒன்றிய குழு தலைவருமான பெ.சுகந்திக்கும், செஞ்சி தாலுகா மேலச்சேரி கிராமத்தைச் சேர்ந்த க.ரங்கசாமி–தனலட்சுமி ஆகியோரின் மகன் க.ர.ஜெயக்குமாருக்கும் திருவண்ணாமலை வேங்கிக்காலில் உள்ள சிங்காரவேல் திருமண மண்டபத்தில் நாளை (புதன்கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் திருமணம் நடக்கிறது.

### பேராசிரியர் அன்பழகன்

திருமணத்தை தமிழக நிதித்துறை அமைச்சரும், தி.மு.க. பொதுச் செயலாளருமான பேராசிரியர் அன்பழகன் தலைமை தாங்கி நடத்தி வைக்கிறார். உணவுத்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலை வகிக்கிறார். முன்னாள் அமைச்சர் கு.பிச்சாண்டி எம்.எல்.ஏ. வரவேற்கிறார். திருமண விழாவில் எம்.பி.க்கள் த.வேணுகோபால், செஞ்சி ராமச்சந்திரன், தேர்தல் பணிக்குழு செயலாளர் பெ.சு.திருவேங்கடம், நகர சபை தலைவர் ரா.ஸ்ரீதரன் உள்பட முக்கிய பிரமுகர்கள்

# இன்று நாள் எப்படி...?

கணித்தவர்: 'ஜோதிடக் கலைமணி' சிவல்புரி சிங்காரம்

19.8.2008 சர்வதாரி வருடம் ஆவணி மாதம் 3-ம் நாள். செவ்வாய்க்கிழமை. தேய்பிறை. திருதியை திதி இரவு 1.47 மணி வரை பிறகு சதுர்த்தி திதி. பூரட்டாதி நட்சத்திரம் மதியம் 3.59 மணி வரை பிறகு உத்ரட்டாதி நட்சத்திரம். மரணயோகம். மதியம் 3.58 மணி வரை பிறகு அமிர்தயோகம்.

| | | | |
|---|---|---|---|
| நல்லநேரம் | : காலை | 8.00 - 9.00 | குளிகை: மதியம் 12.00 - 1.30 |
| | மாலை | 4.30 - 5.30 | வாரசூலை: வடக்கு |
| ராகுகாலம் | : மதியம் | 3.00 - 4.30 | சூரிய உதயம்: காலை 6.14 |
| எமகண்டம் | : காலை | 9.00 - 10.30 | அதிர்ஷ்ட எண்கள்: 3, 6, 9. |

## தினப்பலன்

### மேஷம்

வருமானம் திருப்தி தரும் நாள். வளர்ச்சிக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உதிரிவருமானங்கள் வந்து சேரும். பயணங்களால் பலன் உண்டு. விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள்.

### ரிஷபம்

லாபம் வந்து சேரும் நாள். லட்சியங்களை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பொது விஷ

### துலாம்

இனிமையான நாள் பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரும். பழைய சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும். அக்கம் பக்கத்து வீட்டாருடன் பகை விலகும்.

### விருச்சிகம்

வளர்ச்சி கூட வழிபாட்டினை மேற்கொள்ளும் நாள். தொழில் முயற்சியில் அதிக கவனம்

## வடுகசாத்து தியேட்டரில்